# Egalitarians

United for Equality

Volume 1, Issue 2
February 2021
Every Month Second Sunday

INSIDE THIS ISSUE:

| | |
|---|---|
| Events | 2 |
| Financial Position | 2 |
| Egalitarians Welcomes | 3 |
| Let's Discuss the 'C' Word | 3 |
| 'D'Tales | 4 |
| Special Articles | 5 |

*We thank architect, designer Manimaran for designing Egalitarians' Logo*

## Rawls Turns Hundred!

This year is the 100th birth anniversary of Philosopher John Rawls, who had spent his career pondering about moral justice and whose normative works had sown the seeds for plethora of literature not just in philosophy but also in Economics, Political science and many other social sciences disciplines. Thus, Egalitarians feels privileged in dedicating this issue to the work and memory of John B Rawls.

As promised in the last month issue, we tried to expand the content and added new sections in this issue. A new section called 'D'Tales which exploits data technics to expose the entrenched caste inequalities, and three special pieces contributed by the members feature in this issue apart from last month events and curated news articles. Please do read and tell us how do you feel.



© Three Quarks Daily

**John B Rawls**

**21 Feb 1921 – 24 Nov 2002**

*to*

*John B. Rawls*

> Justice is the first virtue of social institutions, as truth is of systems of thought. A theory however elegant and economical must be rejected or revised if it is untrue; likewise, laws and institutions no matter how efficient and well-arranged must be reformed or abolished if they are unjust. Each person possesses an inviolability founded on justice that even the welfare of society as a whole cannot override.
>
> - John Rawls, *A theory of Justice*

*The principles of justice are chosen behind a veil of ignorance.*

- *Rawls*

# Events in January

- Ramchandra CST Voltaire (Founder & Secretary, AMOFOI) has released the first monthly newsletter of Egalitarians on 10.01.2021 and delivered the keynote address on the importance of inter-caste marriage in breaking the caste perpetuity and bringing about an Egalitarian society.

- In the monthly meeting, which was held on 10.01.2021 the Vision and Objectives were discussed clause-by-clause, one amendment to the objectives was proposed, unanimously voted, and adopted. Proposal to strengthen and scrutinise the membership form was discussed and accepted unanimously.

- The Commissionerate of Social Welfare (GoTN), on 16.01.2021, has furnished incomplete information on our RTI application seeking the scheme implementation details of *Dr. Muthulakshmi Reddy Ninaivu Inter Caste Marriage assistance scheme*. On 28.01.21 we filed an appeal asking to direct the PIO to furnish the relevant information.

- Between 27th and 28th January 2021 four different RTIs seeking Caste diversity in Right to Education act implementation, caste diversity in Madras University, caste diversity in Tamil Nau government secretariat, and the detailed procedure to get the ST *Irular* community certificate were filed by the Egalitarians.

- Egalitarians logo was adopted with 91% voting in favour of the logo, on 21st January 2021.

- One of the members EG Bagath Singh has left the group on 13th January 2021 citing personal reasons.

# Financial Position

| | |
|---|---|
| Donations (between 1st and 31st Jan 2021) | : Rs. 0.0/- |
| Expenditure (between 1st and 31st Jan 2021) | : Rs. 0.0/- |
| Balance (as on 31 Jan 2021) | : Rs. 317/- |

Bank Account Details

| | |
|---|---|
| Bank | : Axis Bank |
| Account number | : 913010045380268 |
| Account type | : Savings Account |
| IFSC | : UTIB0001449 |
| Account holder | : Manoj K G |
| Mobile number | : 8851583097 |

# Egalitarians Welcomes

Two new members have joined us last month. This makes our total strength thirteen. We are growing. However, group diversity in terms of gender and region remains a concern for us.



EG Neena



EG Karthick

# Let's Discuss the 'C' Word: Op-Eds on Caste

- Prof. Radhika Kumar, and Prof. Kaushal Panwar shed light on the woes of the community that involves (*sic*) in cleaning work, their predicament under the colonial rule, and how their narratives are brushed aside even in the modern-day state regimes. Published in - *The Indian Express* (24th Jan, 2021). Read here.

- Researchers - Ingrid and Surbhi – explore the default incompetence of mainstream economics in studying and teaching about systemic inequalities (race in particular). Their study pinpoints that the mainstream economists, male economists, economists of *global north*, and the economists who have graduated more recently are less likely to teach/research structural and historical inequalities. Published in – *Inst. for New Eco. Thinking* (3rd Aug, 2020). Read here.

- Culturalist Urmi Chanda in her article (The Wire, 30th Jan 21) paints a broad-brush summary of the webinar (org. by *Univ. of California*, LA) on Caste and Classical Indian art forms. This article explores the 'aesthetic erasure' in art forms by the caste hegemonic group in India and begs several anthropological questions: 'what makes an art form classical?; what repertoire is canonised?; how is theory created?; and how are genres defined?'.

- An Excerpt from the India Exclusion Report 2020 was published in the *Scroll.in* (29th Jan 2021) that explores the plight of Manual Scavenging labourers in India and the excerpt further touches upon the institutionalisation of caste oppression in sanitation work through contractorization which undercuts the minimal job security which these labours had.

*A just society is a society that if you knew everything about it, you would be willing to enter it in a random place.*

- *Rawls*

# 'D'Tales

Using the (once-in-five-year) Agriculture census data (source) between 1996 and 2016, we try to see the caste category wise trends in land holding pattern and number of land owners. Traditionally, caste and power are tied to the land. Post 1991 reform land has been serving as a ship to sail through the capitalist market. There are studies on re-distributive justice in the racial context of North America (for instance, Mullen and Darity, *From Here to Equality*, UNC Press, 2020.). However, such studies are yet to grow in the Caste context of India.

*It may be expedient but it is not just that some should have less in order that others may prosper.*

*- Rawls*

**Fig. 1. Caste Category-wise Number of Land-owners**




**Fig. 2. Caste Category-wise Amount of Land Holding**




*Note: Agriculture Census was not conducted in Jharkhand in the years 2000 and 2005. Due to data handicap we Do Not claim anything big.*

***தீண்டாமை***

*EG Revathi*

எங்கள் வீட்டின் வாசலில் ஒரு அண்ணா வந்து நின்றுகொண்டு 'சாமி! சாமி!' என்று கூப்பிட்டார். நான் உடனே எழுந்து வெளியே போய் 'என்ன அண்ணா? சொல்லுங்க' என்று கேட்டேன். அதற்கு அந்த அண்ணா 'குடிக்க தண்ணி குடுங்க சாமி ரொம்ப தாகமா இருக்கு' என்றார். நான் உடனே 'உள்ள வந்து உக்காருங்க அண்ணா, நான் தண்ணி எடுத்துட்டு வறேன்' என்று சொல்லிவிட்டு தண்ணீர் கொண்டுவர உள்ளே சென்றேன். உடனே என் அம்மா என்னைக் கூப்பிட்டு 'அவரு உள்ள வரமாட்டாரு. நீ சொம்புல தண்ணி கொண்டுபோயி அவரு கையில ஊத்து குடிச்சுட்டு போவட்டும்' என்று சொன்னார். 'ஏம்மா?' என்று நான் கேட்டேன். 'அது அப்பிடித்தான். ஒனக்கு ஒன்னுந்தெரியாது. சொன்னத செய்' என்று என்னை சிடுக்கென்று பார்த்தார் என் அம்மா.

நான் அமைதியாக தண்ணீர் எடுத்துக்கொண்டு போனேன். அந்த அண்ணாவும் உள்ளே வந்திருக்கவில்லை. வாசலிலேயே நின்றிருந்தார். நான் தண்ணீர் கொண்டுபோனதும் அவரது இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, வாயைக் கைகளில் வைத்துக்கொண்டு 'ஊத்துங்க' என்று கீழே குனிந்தார். தண்ணீர் ஊற்றினேன். குடித்துவிட்டு 'நன்றி சாமி' என்று சொன்னார். அவரிடம் நான் 'ஏங்கண்ணா, சொம்புல குடிக்க மாட்டிங்களா?' என்றேன். அதற்கு அவர் 'நாங்களாம் கீழ்சாதிக்காரங்க. அப்பிடி வாங்கிக் குடிச்சா ஒங்களுக்கு ஆவாது' என்றார். உடனே எனக்குக் கோபம் வந்தது. என் அம்மாவிடம் 'ஏம்மா, கீழ்சாதினா அவங்க நம்ம ஊட்டுக்குள்ள வரகூடாதா?' என்றேன். 'ஆமாம்' என்றார் அம்மா. 'அப்போ எதுக்காகம்மா கல்யாணம், சாவு, கோயில் திருவிழா எல்லாத்துக்கும் அவங்களதான் மொதல்ல கூப்புடுறோம்?' என்று கேட்டேன். 'அவங்க வந்து மோளம் தட்டுனா தான் தீட்டு கழியும். அது ஒரு சடங்கு' என்று பதிலளித்தார். 'அப்போ நம்ம தானம்மா கீழ்சாதி' என்றேன். அம்மா என்னை முறைத்துப்பார்க்க நான் ஓடிவிட்டேன்.

அன்றிலிருந்து இன்றுவரை மேல்சாதி, கீழ்சாதி பிரிவினைகளில் நம்பிக்கையில்லை. எப்போதும் சிந்திப்பதுண்டு – சாதி, மதம் எதுவும் இல்லாமல் இருந்தால் யார் மனமும் புண்படாமல் இருக்குமென்று. இதற்கு நான் யாரிடம் போய் என்ன சொல்வது என்று தெரியவில்லை. இந்த சமயத்தில்தான் Egalitarians குறித்து அறிந்ததும், என் மனதில் தோன்றுவதையெல்லாம் சொல்லவும், சமூகத்தில் மாற்றம் வர என் பங்கும் இருக்க வேண்டும் என்று உணர்ந்து அதில் உறுப்பினரும் ஆனேன்.

சாதிகள் எத்தனை இருந்தென்ன? கடைசியில் 'அந்த பொணத்த தூக்குங்கப்பா' என்றுதான் சொல்கிறார்கள். பிணம் என்று பெயரிடப்போகிற ஒரு சடலத்திற்கு சாதி எதற்கு.

---

***Why I am an Egalitarian?***

*EG Karthik*

ஏறத்தாழ ஆறு மாதங்கள் இருக்கும். கருப்பினத்தவருக்கு ஆதரவாக அரங்கேறிய போராட்டம் அது. சமூக வலைதளங்களில் *"When will India have its Dalit Lives Matter movement?"* எனப் பல்வேறு தரப்பினர் வெளிப்படுத்தியதும் இக்காலகட்டத்தில் தான். இவ்வாறு நிறைய மக்கள் தங்களது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியதைப் பார்க்கும் போது மனதிற்குள் மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் எனக்கும் ஆழ்மனதில் அப்படித்தான் தோன்றியது. சில மாதங்களுக்கு முன்பு நண்பன் ஒருவரிடம் *'Green Book'*

என்ற ஒரு ஆங்கில மொழித் திரைப்படத்தைப் பார்க்கச் சொல்லி பரிந்துரை செய்தேன். நிற வேறுபாட்டைப் பற்றி தெளிவாக விளக்கும் படம் அது. அப்படத்தைப் பார்த்துவிட்டு அவர் கூறியதாவது; நல்ல வேளை இந்தியாவில் உள்ள பெரும்பான்மை மக்கள் கருப்பு நிறத்தில் இருப்பதால் யார் தலித், யார் தலித் இல்லை என்பதை நிறத்தால் வேறுபடுத்தி விட முடியாது. அமெரிக்காவில் உள்ளதைப் போன்று நிறத்தால் வேறுபடுத்தும் படி இருந்திருந்தால் நாம் இன்னும் மோசமான நிலைக்கு சென்றிருக்கக் கூடும். ஒரு விதத்தில் உண்மை தான். அமெரிக்காவில் நிற வேறுபாட்டை நீக்குவதில் மார்டின் லூதர் கிங் அடித்தளம் வித்திட்ட கொள்கைகள் ஒபாமாவின் அதிபர் பதவியாலும், கமலா ஹாரிஸ் துணை அதிபர் பதவியாலும் ஓரளவிற்கு நிறைவேறி இருக்கிறது என்று கூறலாம்.

அவ்வப்போது நான் மனதில் நினைத்தது உண்டு. இதேபோன்று நம் நாட்டிற்கும் மார்டின் லூதர் கிங் போல, சாதியின்மைக்காகவும், சமத்துவ சமுதாயத்திற்காகவும்  பல்வேறு தலைவர்கள் இருந்திருக்கின்றனர், இருந்து கொண்டும் இருக்கின்றனர் . ஆனால் அவர்களது கொள்கைகளை நடைமுறையில் முழுமையாக நிறைவேற்றுவதில் தான் நாம் தவறி விடுகிறோம். சமத்துவம் என்று எதிர்பார்க்கும் போது ஒவ்வொரு மானுடரும் பொறுப்பாகச் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இவ்வாறு இன்றைய மக்களிடத்தில் உள்ள சமத்துவம் மற்றும் சாதி குறித்த புரிதல்களை சற்றே அதிகம் தெரிந்து கொள்வதற்காக இந்த கொரோனா கொடுத்த விடுமுறையில் மக்களுடன் பயணித்தேன் (இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் மட்டும்). இவ்வாறு பயணித்த போது எனக்கு விளங்கியது ஒன்று தான்.  பெரும்பான்மையான கிராமங்களில் வெவ்வேறு இரு சாதிகளுக்கிடையேயான பிரச்சனைகள் இருந்தன. மேலும், இது இங்கு மட்டுமல்ல நாடு முழுவதும் உள்ள பெரும்பான்மை மக்களிடத்தில் சமத்துவம் என்பதற்கு இடமே இல்லை என்பதை நண்பர்களிடம் உரையாடும் போது விளங்கியது. சரி, இங்கு நடக்கும் உயிர்பலிகளுக்கும், சாதி வன்கொடுமைகளுக்கும் தீர்வு தான் என்ன என்று யோசித்த போது எனக்கு டாக்டர் அப்துல் கலாம் நினைவிற்கு வந்தார். அவருடைய கொள்கை ஒன்று தான் – மரத்தைப் பிடுங்கி நடுவதற்குப் பதில் கன்றுகளைப் பிடுங்கி நடு, அங்கு தான் உண்மையான பலன் கிடைக்கும் என்பது. அதனால் தான் அவர் குழந்தைகளையும், மாணவர்களையும் தேர்ந்தெடுத்தாரே தவிர வயதானவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. காரணம் குழந்தைகளிடமும் மாணவர்களிடமும் நல்ல எண்ணங்களை விதைத்தால் அது அனைத்துத் தலைமுறைகளுக்கும் பயனளிக்க வாய்ப்பு உண்டு. ஆனால் இங்கு அப்துல்கலாம் அவரது சொந்த மாவட்டத்திலேயே தோற்று விடுகிறார் என்பதை நினைக்கும் போது மிகுந்த வேதனையளிக்கிறது. அதற்குக் காரணமும் ஒன்றுதான். இங்கு மாணவர்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் நல்ல எண்ணங்களை விதைக்க ஆட்கள் பற்றாக்குறை என்பதே. மாற்றத்தை உருவாக்க ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், கல்விக்கும் பெரிய பங்குள்ளது. இங்குதான் *Egalitarians* பங்காற்றலும் வந்தமைகிறது. தரமான கல்வியைக் கொடுக்க முயலும் போதும், சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க முயல்வதாலும் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் செயல்படுகின்ற அமைப்பில் ஒரு தன்னார்வலனாக இருப்பது மேலும் நம்பிக்கை அளிக்கிறது.

மேலும் இன்றைய காந்திகள் புத்தகத்தில் வருவோரைப் போன்று சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாம் ஒவ்வொருவரும் காந்தியாய் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோமே தவிர இனி ஒரு காந்தி வர மாட்டாரா எனக் கனவு காண்பதில் பயனில்லை.

**முற்போக்கா? மேம்போக்கா?**

*EG Vignesh*

*நண்பர் ஒருவர் மிகவும் "முற்போக்காக" பேசக்கூடியவர்.*

*சாதி ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சமூக மாற்றம் என தொண்டை கிழிய அடித்துவிடுவார். "இந்த சொசைட்டி ஏன் ப்ரோ இப்டி இருக்கு?" என ஓயாமல் சலித்துக்கொள்வார்.*

*அவரும் நானும் ஒருநாள் டீ குடிக்கச் சென்றிருந்தோம். டீ குடித்துக் கொண்டிருக்கும்போது அந்த வழியில் ஒரு பெண் மாடர்ன் உடையில் வேகமாக வண்டி ஓட்டிச்சென்று கொண்டிருந்தார். அதை கவனித்த அவர், "என்ன ப்ரோ ஒரு பொண்ணு இவ்ளோ வேகமா இடிக்கிற மாரி வண்டி ஓட்டிட்டுப் போவது. பொம்பள மாரியா நடந்துக்குது?" என்றார்.*

*உடனே என் வாய் சும்மா இருக்காமால், "பொம்பள மாதிரின்னா எப்டி இருக்குனும்னு சொல்றிங்க ப்ரோ?" என்றேன்.*

*" பொண்ணுமாதிரின்னா பொண்ணுமாதிரி தான். ஆம்பள மாதிரி நடந்துகிட்டா அது என்ன பெமினிசம்?". உடனே நான் "இப்டி மொதல்ல இலக்கணம் வகுக்கறத நிறுத்துங்க ப்ரோ. இந்த மாதிரி ஸ்டிரியோடைப் பண்ணாதிங்க. எல்லாத்துக்கும் ஒரு ப்ரீடிடர்மைண்ட் தாட் வைச்சுகிட்டு அதுக்குள்ள அவங்கள அடக்க பாக்குறிங்க, அதுல அடங்காம இருக்குறவங்கள எப்புடி திரியுது பாரு னு சொல்விங்க. இந்த மாரி நினைப்பும் கூட ஒரு அடிப்படைவாதம் தான்றத எப்பதான் ரியலைஸ் பண்ணுவிங்க?" என்று முடித்தேன் அப்போதிலிருந்து எங்கள் நட்பு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுவிட்டது.*

*சமூகத்தில் இதுபோன்ற மயங்குநிலை பொதுப்புத்தி(Unconscious Stereotype) ஓயாமல் உலவி வருகிறது. இவற்றை உணராத வகையில் "முற்போக்கு" பேசும் நாம் கூட ஏதோ ஓரிடத்தில் தோற்றுப்போகின்றோம்.*

*ஒரு குழந்தை தனக்கான விழுமியங்களை இந்த சமூகத்தில் இருந்தே எடுத்துக்கொள்கிறது. அவற்றில் இந்த பொதுப்புத்தி புரிதல்களும் சேர்ந்தே ஒட்டிக் கொள்கின்றன.*

*வளர்ந்த குழந்தைகளான நாம் அதனை கண்டறிந்து அகற்றிக்கொள்ளாதவரை அந்த அழுக்குடன் சேர்ந்து நம் மனமும் நாற்றமடிக்கிறது. அதற்கான சான்றே இந்த உரையாடல்.*

*இதனை கண்டறிய வெறும் "மேம்போக்கான" முற்போக்கு உதவாது. நம்மில் பலர் இன்னும் இந்த மேம்பொக்கு வகையறாக்கள் தான். முகப்புத்தகத்தில் முற்போக்கு பேசி ஆர்கஸம் அடையும் வகையறாக்கள். சாதிய பாகுபாடு கொண்டு உடல் ரீதியாக தாக்கும் வெறிக்கும், பொதுப்புத்தி பார்வையில் "இவங்க இப்படிதான்", "அவங்க ப்லட்லையே இருக்கு", "இவன் இப்டி பண்ற க்ரூப் தான்" என மனரீதியாக பாகுபடுத்துவதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை.*

இங்கு அவர்கள் தெரிந்தே ஒருவரை பாகுபடுத்திப் பார்ப்பதில்லை. தன்னையும் அறியாமல் தன்னுடன் சேர்ந்தே வளர்ந்த சமூகத்தின் தவறான விழுமியத்தின்வழி அதனைச் செய்கின்றனர். இவற்றை அழித்தொழிக்க வேண்டியது மிகவும் முக்கியம். இதற்கு கற்றல் தான் ஒரே வழி. சமூகத்தில் இருந்து, புத்தகத்தில் இருந்து, எங்கிருந்து வேண்டுமானாலும் தொடர்ந்து கற்றல் இன்றியமையாததாகிறது. உங்களை கற்றல், நம்மை கற்றல் தேவையாகிறது. அத்தகைய கல்வியே சமூக மாற்றத்தை நிகழ்த்திக் காட்டும். மேம்போக்கான முற்போக்கின் மாயையை உடைத்து உலக வெளியின் உன்னத மனிதத்தை சுவாசிக்க அதுவே பாதை வகுக்கும்.

---

*To access the details of the information that Egalitarians sought under the RTI act, please click here.*

*Egalitarians maintains a repository of Caste atrocities reported in dailies. To access the repository, please click here.*

***We accept donations***

*To donate, please contact*

*EG Manoj*

*88515 83097*

***To join as a member***

*Please contact*

*EG Rajeswaran*

*8072633868*

*rajeswaranganes@gmail.com*

***We are on Facebook***

*To follow click here*